# நூல் வெளியீடு - 2017

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தமது கையெழுத்துப் பிரதிகளை நூலாக்கம் செய்வதற்கு பொருளாதார இடர்பாடுகளை எதிர் நோக்கும் கிழக்கு மாகாண படைப்பாளிகளின் ஆக்கங்களை நூல் வடிவில் வெளியீடு செய்வதற்கு இவ்வருடமும் தீர்மானித்துள்ளது. **புலமைத்துவம் சார் படைப்புகள், பிரதேச மற்றும் கலை தொடர்பான ஆய்வுசார் படைப்புகள், அறிவியலும் தொழில்நுட்பமும், பாரம்பரிய, நாட்டார் கலை வடிவங்களின் ஆவணத் தொகுப்பு, வரலாறு, நாடகம், காவியம், சிறுவர் இலக்கியம், சிறுகதை, நாவல், கவிதை போன்றவற்றை கையெழுத்துப்பிரதிகளாக வைத்திருக்கும் படைப்பாளிகள் விண்ணப்பிக்கலாம்.**

தமது ஆக்கங்களை 120 பக்கங்களுக்குள் (A4 தாள்) அமையக்கூடியவாறு கணனித் தட்டச்சு செய்து வன்பிரதியையும் (Hardcopy) மேலும் அதன் மென்பிரதியை (Soft copy) பாதுகாப்பாக இறுவெட்டு (CD) மூலமும் விண்ணப்பத்துடன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் அனைத்தும் அச்சிடப்படும் என உறுதியளிக்க முடியாது. தகுந்தவை தெரிவுக்குழு மூலம் தெரிவு செய்யப்பட்டு அச்சிட்டு வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆக்கங்கள் யாவும் 28.04.2017 க்கு முன்னர் எமது திணைக்கள முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

ஆக்கம் மற்றும் CD அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி

**மாகாணப் பணிப்பாளர்**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (கி.மா),**
**உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**

விண்ணப்பப்படிவங்களை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் பிரதேச செயலகங்களிலும் http://www.ep.gov.lk/ எனும் வலைத்தள முகவரியினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவலுக்கு தாம் வசிக்கும் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தருடன் அல்லது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 026-2220036 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்காக குறிப்பிடப்பட்டுள்ள இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் எவ் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்